IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 43/2025 - PW-10

| | |
|---|---|
| Name | திரு. கணேஷ் |
| Husband/Father Name | சேகர் |
| Village /Area | இறைவன் காடு |
| Taluk | வேலூர் |
| Occupation | இரண்டாம் நிலை காவலர் |
| Age | 32 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.07.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது இரண்டாம் நிலை காவலராக சென்னை கோயம்பேடு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2023ம் ஆண்டு அரக்கோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது நிலைய குற்ற எண்.337/2023, 302 இதச பிரிவு வழக்கில் சம்மந்தமாக நிலைய அலுவலில் இருந்த போது அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் விக்கி(எ)விக்னேஷ், வயது.23, த/பெ.ராமகிருஷ்ணன் என்பவரின் பிரேதத்தை 04.09.2023 அன்று வேலூர் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்று சவகிடங்கில் பிரேதத்தை வைக்க அலுவல் மருத்துவரிடம் கடிதத்தை கொடுத்தேன். அன்று 18.45 மணி ஆனதால் பிரேத பரிசோதனை செய்ய இயலாது மறுநாள் செய்வதாக அலுவல் மருத்துவர் கூறினார். மறுநாள் 05.09.2023 அன்று பிரேத பரிசோதனை மதியம் 14.00 மணிக்கு முடித்து இறந்தவரின் உடலை அவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது உடல் உள்ளுறுப்புகள் மற்றும் ரத்த மாதிரிகள் வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டு நிலையம் வந்து ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 04.09.2023 அன்று 18.45 மணியளில் பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரிதான். என்னுடன் உதவி ஆய்வாளர் வந்திருந்தார்.

பிரேதத்தை அரக்கோணம் சித்தேரி கிராமத்திலுள்ள நாகவேடுக்கு செல்லும் நீர் வரத்து கால்வாயிலிருந்து எடுத்து சென்றோம். தனியார் ஆம்புலன்சை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. அதனை ஏற்பாடு செய்தவர் ஆய்வாளர் தான்.

சம்பவ இடத்திலிருந்து வேலூர் அரசு மருத்துவமனை சுமார் 150 கி.மீ தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அங்கிருந்து மருத்துவமனைக்கு செல்ல 3 மணி நேரம் ஆகியிருக்கும் என்று சொன்னால் சரிதான்.

நான் 04.09.2023 அன்று 15.45 மணியளவில் தான் பிரேதத்தை கடைசியாக சம்பவ இடத்தில் பார்த்தேன். பிரேத விசாரணை பற்றி எனக்கு தெரியாது. பிரேத விசாரணை சுமார் 1.30 மணி நேரம் நடைபெறும் என்று சொன்னால் சரிதான்.

சம்பவ இடத்துக்கு ஆய்வாளர் எப்போது போனார் என்று எனக்கு தெரியாது. 15.45 மணிக்கு நான் பிரேதத்தை பார்த்ததாக கூறுவது பொய் என்றும் காலை 10 மணிக்கே பிரேத விசாரணை முடிந்து பிரேதம் சம்பவ இடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டது என்று சொன்னால் எடுத்திருக்கலாம் ஆனால் நான் சென்றது 15.45 மணிக்கு தான்.

காலை 10 மணிக்கே பிரேதத்தை சம்பவ இடத்திலிருந்து எடுத்து சென்று ஏதோ ஒரு இடத்தில் வைத்து இறந்த நபருக்கு காயங்களை போலீசாரே ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

மாலை 18.45 மணிக்கு பிரேதம் வேலூர் மணிக்கு எடுத்து செல்லவில்லை என்றும் இரவு 11 மணிக்கு தான் எடுத்து செல்லப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

ஆய்வாளரும் நானும் சேர்ந்து தவறாக எதிரிகளை கைது செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.29 18:57:40 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.